முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சண்டேஸ்வர நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

08.12.2018, சனிக்கிழமை

1. **ஞானச்சுடரே அரங்கராசா**
**ஞானிகளை வணங்கிட வழிகாட்டி**
**ஞானபூசை செய்திடும் தேசிகா**
**ஞாலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேள் திங்கள்**
**தெரியவே இருபானீர் திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 22ம் நாள் 08.12.2018, சனிக்கிழமை)**
**தேசிகனுக்கு சண்டேஸ்வர நாயனார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உலகையே உலுக்கும் பேரிடர்கள்
ஞானமிலா மக்கள் செய்கையாலே
நியாயமிலா பதவி வகை சிக்கலாலே
4. சிக்கலான நிர்வாக கேடுகளாலே
சேவையை மறந்து சுயநலமுற
பக்குவமில்லா நடைமுறை கூடியதாலே
பாரெங்கும் அழிவு பெருகுதப்பா
5. அப்பனே கலி முற்றி மேலும்
ஆபத்து சூழாது இருக்க
ஒப்பு கொண்டு தருமநெறியாம்
ஓங்காரன் காட்டும் தயவு நெறி
6. தயவு நெறியே அரங்கன் ஞானநெறி
தலை வணங்கி உலகோர் ஏற்று
தயவு கூட்டி வருகை புரிய
தன்னார்வ தொண்டுகளை பெருக்கி
7. பெருக்கி ஆறுமுகனார் வழிபாட்டை
பேருலகே செய்து வருதல் காண
வருத்தும் பேரிடர்கள் இனி
வையகத்தை நெருங்கா அகல நேரும்
8. நேருமைபட இனியேனும் மக்கள்
நீதியரசர்கள் நிர்வாகிகள் என
தருமநெறி அரங்கன் காட்டும்
தயவு நெறி ஏற்று உண்மைபட
9. உண்மைபட சுயநலம் பேராசை
ஊழல் வகை செயலை விட்டுவிட்டு
நன்மை கருதி பொதுநலம்பட
நாட்டின் பாதுகாப்பு வளர்ச்சிக்கான
10. வளர்ச்சிக்கான உயர் சேவைகளை
வலிய ஏற்று நீதிமாறா செயல்பட
தளர்விலா சமூக மாற்றமும்
தன்னார்வ சிந்தையும் மலர வளர

11. வளரவே இயற்கை சக்திகளான
வல்லமையான பஞ்சமகா சக்திகள்
வளர்க்கும் தேசநலம் காக்கும்
வல்லமை நல்சக்திகளாகவே அருளும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சண்டேஸ்வர நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அருட்பெருஞ்ஜோதி சுடராக விளங்கி நிற்கும் ஞானச்சுடரே அரங்கமகா தேசிகனே உலக மக்களெல்லாம் கடைத்தேறிடவே ஞானிகளை வணங்கிட வழிகாட்டி ஞானபூஜைகளை செய்திடும் ஞானதேசிகனே இவ்வுலகினில் அற்புதமான உமது பெருமைகளைக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 22ம் நாள் 08.12.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே சண்டேஸ்வர நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சண்டேஸ்வர நாயனார்.

உலக மக்களின் அறியாமையினால் செய்யும் தீமையான செயல்களினாலும் மக்களுக்கு பாதுகாப்பாய் இருக்க வேண்டிய பதவியாளர்களின் நியாயம் இல்லாத செயல்பாடுகளினால் வந்திட்ட சிக்கல்களினாலும், நிர்வாக சீர்கேடுகளாலும், பதவியில் உள்ளோர் சேவை மனப்பான்மையை மறந்து சுயநலத்துடன் பக்குவமில்லாமல் நடந்து கொள்கின்ற செயல்பாடுகள் உலகில் அதிகமானதாலும் உலகினில் பாவச்சுமை அதிகமாகி உலகையே உலுக்கும் பேரிடர்கள் வருகின்றதப்பா. இயற்கையின் கோபத்தால் இயற்கை பேரழிவுகளால் உலகமெங்கும் அழிவுகள் நாள்நாளும் பெருகி வருகுதப்பா.

ஆதலினால் உலக மக்களே கலியுகத்தின் வேகம் முற்றி மேலும் மேலும் உலகினில் ஆபத்துகள் சூழாமல் இருக்க வேண்டுமானால் நீங்களெல்லாம் தருமத்தின் வழியினால் ஆகிய தருமநெறியை ஒப்புக் கொண்டு கடைப்பிடித்திட வேண்டுமப்பா.

தருமத்தின் நெறியாம் முருகப்பெருமான் வகுத்த தயவு நெறியாம் அரங்கன் கூறும் ஞானநெறியினை உலகோர் அனைவரும் தட்டாது தலைவணங்கி ஏற்றுக் கொண்டு உங்களது தருமத்தினை தயவினை பெருக்கிக் கொண்டு செயல்பட வேண்டும். தன்னார்வத்துடன் உலக மக்களின் நலனிற்காக தொண்டுகளை செய்திட வேண்டும்.

உலக மக்களெல்லாம், காக்கும் தெய்வம் முழுமுதற்கடவுள் முருகப்பெருமானின் வழிபாட்டினை செய்து வரவர, உலகினை துன்பத்தில் ஆழ்த்தும் இயற்கை பேரிடர்கள் இனியும் உலகினை நெருங்காது விலகிடும்.

ஆதலினாலே உலகமக்களே நீங்கள் நேர்மையுடன் நடந்து கொள்ளுங்கள். நீதியை பரிபாலனம் செய்கின்ற நீதியரசர்கள், ஆட்சி புரிவோர், நிர்வாக பொறுப்பில் உள்ளோர் என அனைவரும் தருமநெறியாம் அரங்கன் காட்டும் தயவு நெறியினை ஏற்றுக் கொண்டு உண்மையுடன் நடந்து கொள்வதோடு, சுயநல போக்கை விட்டுவிடுங்கள், பேராசைகளை விட்டுவிடுங்கள், ஊழல் போன்ற தீமையான செயல்கள் செய்வதை விட்டுவிட்டு, மக்களுக்கு நன்மை செய்யும்விதமாக பொதுநலன்பட செயல்பட்டு நாட்டின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் உண்டான உயர்வான சேவைகளை அவரவரும் தமது கடமைகளாக ஏற்று நீதிநெறி தவறாமல் செயல்பட வேண்டும்.

தளர்ச்சி அடையாத சமூக மாற்றமும் மக்களிடம் தன்னார்வமிக்க சிந்தனைகள் அதிகமாகிட இயற்கை சக்திகளான வல்லமைமிக்க பஞ்சபூத மகா சக்திகளும் நன்மைகளை உண்டாக்கும், மக்களுக்கு துன்பம் தராமல் நாட்டிற்கு நல்லதே செய்யும். அவை அழிவு சக்திகளாக மாறாமல் வல்லமைமிக்க நன்மைகளையே தருகின்ற நற்சக்திகளாக மட்டுமே செயல்பட்டு மக்களை மகிழ்வுடன் வாழ வழிவகை செய்து வளம் பெருக்கிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம், உலகை உலுக்கும் இயற்கை பேரிடர்களிலிருந்து நம்மைக் காக்க வழிவகை கூறுகிறார் மகான் சண்டேஸ்வர நாயனார்.

–சுபம்–